සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது.
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதி மதிப்பீடு - 2020
Year End Evaluation

ශ්‍රේණිය / தரம் / Grade: 11	විෂයය / பாடம் / Subject: வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும்	පත්‍රය / வினாத்தாள் / **Paper**: **I**	කාලය / காலம் / **Time**: 01 மணி

கவனிக்க :-

- எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4)என இலக்கமிடப்பட்ட விடைகளில் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

★ பின்வரும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு 1- 4 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக

★ நவீன தொழினுட்பத்தின்மூலம் சேதனப்பசளை தயரிக்கும் விசேட பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த அருணன் என்பவர் அதற்கான மூலப்பொருட்களைப் பயன்படுத்தி சேதனப்பசளை உற்பத்தியில் ஈடுபடுகின்றார். அவ்வுற்பத்திக்குத் தேவையான போதுமான இடவசதி அவரிடம் காணப்பட்டதால் அவர் அவ் உற்பத்தியில் ஈடுபடுகின்றார்

இவ்வுற்பத்தி நிலையமானது மரக்கறி மற்றும் பூக்கள் பயிரிடும் பிரதேசத்திற்கு அண்மையில் நிறுவப்பட்டது.

(01) இச்சம்பவத்திற்கமைய அருணன் வணிகமாது,
(1) பொருட்களை உற்பத்தி செய்யும் வணிகமாகும்.
(2) சேவையை வழங்கும் வணிகமாகும்.
(3) பங்குடைமை வணிகமாகும்.
(4) இலாப நோக்கற்ற வணிகமாகும்.

(02) அருணன் வணிகத்தின் பலமானது,
(1) அருணன் விசேட பயிற்சி பெற்றிருப்பதாகும்.
(2) அருணன் வணிகமானது இலக்குச் சந்தையை நோக்காகக் கொண்டது.
(3) சுற்றுப்புறத்தில் வேறு வணிகம் காணப்படாமை.
(4) சேதனப்பசளைப் பாவனைக்குப் பழக்கப்பட்டமை.

(03) அருணன் வணிகத்தினால் உற்பத்தி செய்யப்படும் சேதனப் பசளை உள்ளடங்கும் உற்பத்திக் காரணி எது?
(1) நிலம் (2) உழைப்பு (3) மூலதனம் (4) முயற்சி

(04) இச்சம்பவத்தின்படி சரியான கூற்றைத் தெரிவுசெய்க
(1) அருணனுடைய வணிகமானது சட்டஆளுமையுடையது.
(2) வாசனா, அருணன் வணிகத்தின் பங்காளர் ஆவார்.
(3) இப்பிரதேசத்தின் விவசாயிகள் இவ்வணிகத்தில் அக்கறை செலுத்தவில்லை.
(4) மரக்கறி பயிர்ச்செய்கையில் ஈடுபடுவோர் இப்பிரதேசத்தில் காணப்படுதல் இவ்வணிகத்திற்கு ஒரு வாய்ப்பாகும்.

(05) உரிமை அடிப்படையில் வணிக அமைப்புக்களை வகைப்படுத்தினால் சரியான விடையாக அமைவது,

(1) தனியார்துறை வணிகம், சிற்றளவு மற்றும் நடுத்தர வணிகம்.
(2) தனியார்துறை வணிகம், பொதுத்துறை வணிகம்.
(3) பொதுத்துறை வணிகம், பாரியளவு வணிகம்.
(4) இலாப நோக்குள்ள வணிகம், இலாப நோக்கற்ற வணிகம்.

(06) வணிகத்தின் பிரதான நோக்கமாக அமைவது,

(1) தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தல்.
(2) நுகர்வோரது தேவைகள், விருப்பங்களைப் பூர்த்தி செய்தல்.
(3) பொருட்கள் சேவைகளின் தரத்தினை மேம்படுத்தல்.
(4) ஊழியர் நலன் பேணல்.

(07) பங்குடைமை வணிகமொன்றில் பங்காளரின் இழிவு எண்ணிக்கையையும் உச்ச எண்ணிக்யையும் தீர்மானிக்கும் சட்டம்.

(1) 1890 ம் ஆண்டு பங்குடைமைச் சட்டம்.
(2) 1918 ம் ஆண்டு இல 6 வணிகப்பெயர்பதிவுக் கட்டளைச் சட்டம்.
(3) 1972 ம் ஆண்டு இல 5 கூட்டுறவுச் சட்டம்.
(4) 2007 ம் ஆண்டு இல 7 கம்பனிச் சட்டம்.

(08) சாலிய ஜயசிங்க என்பவர் தனது வணிகக்தை “சாலிய ஸ்டோர்ஸ்” என்ற பெயரில் நடாத்திச் செல்கின்றார். இவ்வணிகத்தைப் பதிவு செய்தல் தொடர்பான சரியான கூற்று,

(1) மேற்படி வணிகமானது பதிவு செய்வதன் மூலம் சட்ட ஆளுமையைப் பெறுகின்றது.
(2) இவ்வணிகக்தைப் பதிவு செய்தல் கட்டாயமானது.
(3) இவ்வணிகத்தின் பெயரைப் பதிவு செய்தல் கட்டாயமன்று
(4) இவ்வணிகத்தை கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் வேண்டும்.

கீழ்வரும் தகவல்களைக் கொண்டு வினா இல 9, 10 க்கு விடையளிக்குக.
வணிக அமைப்புக்களின் பண்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - வரையறுக்கப்படாத பொறுப்பு
B - ஒப்பந்தங்களை ஏற்படுத்தல்
C - சட்டஆளுமை
D - ஜனநாயக நிர்வாகம்
E - அங்கத்துவ நலன் பேணல்
F - பதிவு செய்தல் கட்டாயமன்று

(09) தனியுடைமை வணிகத்தின் பண்பாக அமைவது.

(1) A, B (2) B, D (3) A, F (4) C, E

(10) இலங்கையில் ஆகக்குறைந்தது 10 அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கக்கூடிய வணிக அமைப்பின் பண்பாக அமைவது,

(1) A, B (2) C, D (3) D, E (4) B, F

(11) சேதம் ஏற்படாத சந்தர்ப்பத்திலும் நட்டஈட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்ளக்கூடிய காப்புறுதி ஒப்பந்த வகை எது?

(1) தீ அபாயக் காப்புறுதி
(2) கள்வர் பயக் காப்புறுதி

(3) கடலபாயக் காப்புறுதி

(4) ஆயுள் காப்புறுதி

(12) கீழே தரப்பட்ட தொடர்பாடல் ஊடக உதாரணங்களுள் இலத்திரனியல் ஊடகத்துக்குப் பொருத்தமான உதாரணம்.

(1) எண்மானப் பலகை (2) செயலமர்வு (3) கூட்டம் (4) கலந்துரையாடல்

(13) போக்குவரத்து ஊடகமொன்றை நகர்த்துவதற்குத் தேவையான சக்தியை சூரியசக்தியினூடாகப் பெற்றுக் கொள்வதாயின் இதில் காணப்படும் போக்குவரத்தின் அடிப்படை மூலகம் எது?

(1) மார்க்கம் (2) ஊடகம் (3) சக்தி (4) தரிப்பிடம்

(14) கீழே X நிரலில் முகாமைத்துவக் கருமங்களும் Y நிரலில் அதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளும் தரப்பட்டுள்ளன

I. திட்டமிடல்	A- விற்பன்ன முகாமையாளர் விற்பனை ஊழியருக்கு ஆலோசனைவழங்கல்
II. ஒழுங்கமைத்தல்	B- 10% விற்பனையை அதிகரிக்கத் தீர்மானிக்கப்படது
III. நெறிடுப்படுத்தல்	C- விற்பனை அதிகரிப்பு ஏற்பட்டதைப் பரீட்சித்தல்
IV. கட்டுப்படுத்தல்	D- விற்வனை உதவியாளர்களை வேலைக்கு அமர்த்தல்

மேலே X நிரலை Y நிரலுடன் இணைத்தால் பெறப்படும் சரியான விடை,

(1) BACD (2) BCAD (3) BDAC (4) BDCA

(15) பங்குகளை முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கும் அனுகூலத்தையும் மற்றும் நிலையான வைப்பின் மூலம் கிடைக்கும் அனுகூலத்தையும் காட்டும் விடை.

(1) மூலதன இலாபம், பங்கிலாபம் (2) வட்டி, மூலதன இலாபம்

(3) மூலதன இலாபம், வட்டி (4) பங்கிலாபம், வட்டி

(16) தீபிகா தான் சேமித்து வைத்த பணத்தினை பயனுள்ள வழியில் முதலீடு செய்யத் தீர்மானித்துள்ளார். அவரது முதலீட்டுத் தேர்விற்கான காரணிகள் வருமாறு.

- முதலீட்டிற்கான முழுப்பாதுகாப்பு கிடைத்தல்
- இடர்குறைவு
- மூன்று மாதத்துள் முதலீட்டுப் பணத்தைத் திருப்பிப்பெறலாம்.

தீபிகாவுக்கு பொத்தமான முதலீடு

(1) சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்தல்

(2) திறைசேரி உண்டியலைக் கொள்வனவு செய்தல்

(3) சொத்துக்களைக் கொள்வனவு செய்தல்

(4) சேமிப்புக் கணக்கில் பணத்தை வைப்புச்செய்தல்

(17) வணிகக் கொடுக்கல் வாங்கல்கள் என்றால்

(1) பணத்தினால் அளவிடக்கூடிய மற்றும் அளவிடமுடியாத நடவடிக்கைகளாகும்

(2) வணிகத்தில் அக்கறை செலுத்தும் தரப்பினருக்கு தீர்மானங்களை மேற்கொள்வதற்கான தகவல்களை வழங்கல்

(3) பொருட்கள் சேவைகளை உடன்காசுக்குக் கொள்வனவு செய்தல்
(4) வணிகத்திற்கும் ஏனைய தரப்பினருக்குமிடையிலான வளங்களின் பரிமாற்றமாகும்

(18) கீழே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுள் சொத்து, உரிமை மற்றும் பொறுப்புக்களில் தாக்கம் செலுத்தக் கூடிய கொடுக்கல் வாங்கல்களைத் தெரிவு செய்க.
(1) உரிமையாளர் ரூபா 5000 ஐ தனது சொந்தத் தேவைக்காகப் பற்றினார்.
(2) கடன்கொடுத்தோனுக்கு ரூபா 15000 கொடுத்துத் தீர்க்கப்பட்டது.
(3) வங்கிக்கடன்வட்டி ரூபா 6000 உட்பட ரூபா 50000 வங்கித் தவணைக் கட்டணம் செலுத்தப்பட்டது.
(4) கடன்பட்டோரிடமிருந்து ரூபா 5000 பெறப்பட்டது.

(19) குறித்த தினத்தில் வணிகமொன்றின் கணக்கீட்டுச் சமன்பாடு கீழே தரப்பட்டுள்ளது.

சொத்து	=	உரிமை	+	பொறுப்பு
75,000		50,000		25,000

ரூபா 5000 தரகு பெறப்பட்ட பின் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படும் தாக்கம்.

	சொத்து	=	உரிமை	+	பொறுப்பு
(1)	80,000	=	50,000	+	30,000
(2)	75,000	=	50,000	+	25,000
(3)	80,000	=	55,000	+	25,000
(4)	70,000	=	50,000	+	20,000

(20) கீழே X நிரலில் கணக்கு வகைகளும் Y நிரலில் கணக்குகளுக்கான உருப்படிகளும் தரப்பட்டுள்ளன.

X	Y
I. சொத்துக் கணக்கு	A- கொடுத்த கழிவு
II. பொறுப்புக் கணக்கு	B- விற்பனை
III. உரிமைக் கணக்கு	C- தளபாடம்
IV. வருமானக் கணக்கு	D- பற்று
V. செலவுக் கணக்டு	E- கடன் கொடுத்தோர்

மேற்படி Y, X நிரல்களை இணைத்தால் வரும் சரியான விடை.
(1) C, E, D, A, B (2) C, E, B, D, A (3) C, E, D, B, A (4) C, E, B, A, D

(21) கடன்பட்டோரிமிருந்து ரூபா 60,000 பெறுமதியான காசோலை கிடைக்கப்பெற்றால் அதற்கான இரட்டைப் பதிவு.
(1) காசுக் கணக்கு வரவு ரூபா 60,000
கடன்பட்டோன் க/கு செலவு ரூபா 60,000
(2) வங்கிக் க/கு வரவு ரூபா 60,000
கடன்பட்டோன் க/கு செலவு ரூபா 60,000
(3) வங்கிக் க/கு வரவு ரூபா 60,000
(4) கடன்பட்டோன் க/கு வரவு ரூபா 60,000

காசுக் க/கு செலவு ரூபா 60,000 வங்கிக் க/கு செலவு ரூபா 60,000

(22) வியாபாரக் கழிவு தொடர்பான சரியான கூற்றைத் தெரிவு செய்க.
   (1) கடன்பட்டோரிடமிருந்து காசு பெறப்படும் போது குறைக்கப்படும் கழிவு வியாபாரக்கழிவாகும்
   (2) உடன்காசுக்கு பண்டங்களை விற்பனை செய்யப்படும் போது வியாபாரக் கழிவு வழங்கப்படும்
   (3) வியாபாரக்கழிவானது கணக்குகளில் பதியப்படுவதில்லை.
   (4) காசுப்புத்தகத்தின் கழிவுநிரலில் வியாபாரக் கழிவு பதியப்படும்

(23) கடன்விற்பனை ரூபா 50,000 கான இரட்டைப்பதிவு
   (1) கடன்கொடுத்தோர் க/கு வரவு - விற்பனைக் க/கு செலவு
   (2) கடன்பட்டோர் க/கு வரவு - விற்பனைக் க/கு செலவு
   (3) விற்பனைக் க/கு வரவு - கடன்பட்டோர் க/கு செலவு
   (4) விற்பனைக் க/கு வரவு - காசுக் க/கு செலவு

(24) மின்சாரக் கட்டணம் ரூபா 5000 காசுக் கணக்கில் சரியாகப் பதியப்பட்ட போதிலும் ஏனைய செலவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது இத் தவறைத் திருத்துவதற்கான சரியான நாட்குறிப்புப் பதிவு

   (1) மின்சாரக் கட்டணக் க/கு வரவு 5,000
   காசுக் க/கு செலவு . 5,000

   (2) மின்சாரக்கட்டணக் க/கு வரவு 5,000
   தொங்கல் க/கு செலவு ரூபா 5,000

   (3) மின்சாரக்கட்டணக் க/கு வரவு 5,000
   ஏனைய செலவுக் க/கு செலவு 5,000

   (4) ஏனைய செலவுக் க/கு வரவு ரூபா 5,000
   மின்சாரக் க/கு செலவு ரூபா 5,000

(25) காயா வணிகத்தின் 2019/12/31ல் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட மீதிகள்.
   - மூலதனம் ரூபா 500,000 (2019/1/1)
   - விற்பனை வருமானம் ரூபா 100,000
   - தரகு வருமானம் ரூபா 25,000
   - வருடத்திற்கான செலவுகள் ரூபா 50,000
   - பற்று ரூபா 10,000

   2019/12/31ல் காயா வணிகத்தின் உரிமை யாது?
   (1) ரூபா 550,000 (2) ரூபா. 565,000 (3) ரூபா. 590,000 (4) ரூபா 625,000

(26) வணிகத்தின் பாவனைக்காக இயந்திரம் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. இதற்குப் பொருத்தமான மூல ஆவணத்தையும், மூலஏட்டையும் குறிப்பிடுக.
   (1) கொள்வனவு பட்டியலும், கொள்வனவு நாட்குறிப்பும்

(2) கைச்சாத்தும், காசுப்புத்தகமும்

(3) நாட்குறிப்புக் கைச்சாத்தும், பொது நாட்குறிப்பும்.

(4) கொள்வனவுப் பட்டியலும், பொது நாட்குறிப்பும்.

(27) 2020/01/01ல் வணிகமொன்றின் வங்கிக் கணக்கு மீதி ரூபா 15,500 ஆகவும் வங்கிக்கூற்று மீதி ரூபா 16,000 ஆகவும் காணப்பட்டது. இவ்வேறுபாட்டுக்குக் காரண மான கொடுக்கல் வாங்கல்கலைத் தெரிவுசெய்க.

(1) வங்கியினால் அறவிடப்பட்ட வங்கிக் கட்டணம் ரூபா 500.

(2) வங்கிக்கு நேரடியாகக்கிடைத்த முதலிட்டு வருமானம் ரூபா 500.

(3) நிலையான கட்டளையின் பேரில் வங்கி செலுத்திய காப்புறுதிக்கட்டணம் ரூபா 500.

(4) வங்கியில் வைப்புச்செய்தும் தீர்வையாகாத காசோலை ரூபா 500.

(28) பாண் உற்பத்தி செய்யும் பேக்கரி உரிமையாளர் தனது சொந்தத் தேவைக்காக 10 கிலோ பாணை எடுத்தார். இதனை பதிவு செய்வதற்கான முதன்மை ஏடு எது?

(1) பொது நாட்குறிப்பு

(2) கொள்வனவு நாட்குறிப்பு

(3) விற்பனை நாட்குறிப்பு

(4) சில்லறைக் காசேடு

கீழேதரப்பட்ட தகவல்கள அடிப்படையாகக் கொண்டு வினா இல 29, 30 ற்கு விடையளிக்குக

- நிரோஷ் விளையாட்டுக் கழகத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 200. ஒரு அங்கத்தவருக்கான வருடாந்தக் கட்டணம் ரூபா 100, 2019.12.31ன் இறுதியில் 20 அங்கத்தவர்கள் அங்கத்துவப் பணத்தைச் செலுத்தவில்லை.

(29) 2019ம் ஆண்டில் பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கில் இடம்பெற வேண்டிய அங்கத்துவக் கட்டணத்தின் பெறுமதி.

(1) ரூபா 22,000 (2) ரூபா.2,000 (3) ரூபா.20,000 (4) ரூபா18,000

(30) 2019/09/31ல் வருட இறுதியில் வருமானக் கூற்றில் காட்டப்படவேண்டிய அங்கத்துவக் கட்டணத்தின் பெறுமதி.

(1) ரூபா22,000 (2) ரூபா18,000 (3) ரூ.ரூபா.20,000 (4) ரூபா.2,000

கீழ் வரும் தகவல்களைப் பயன்படுத்தி 31ம், 32ம் வினாக்களுக்கு விடை தருக.

- தளபாட உற்பத்தியில் ஈடுபடும் ஜேம்ஸ் வணிகத்தின் 2020 ஜனவரி மாதத்திற்கான முழு நேர்க் கிரயம் ரூபா 58,000 மொத்த மேந்தலைக் கிரயம் ரூபா 62,000. அலகொன்றிக்கு 20% இலாபம் வைத்து விற்பனை விலை தீர்மானிக்கப்பட்டது. இவ் வணிகத்தில் ஜனவரி மாதம் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த அலகுகள் 100.

(31) இவ்வணிகத்தின் ஒரு மேசைக்கான அலகுக் கிரயம் யாது?

(1) ரூபா 5,800 (2) ரூபா 6,200 (3) ரூபா. 620 (4) ரூபா. 1,200

(32) ஒரு மேசைக்கான விற்பனை விலை யாது?

(1) ரூபா 1,440 (2) ரூபா 1,200 (3) ரூபா. 1,400 (4) ரூபா. 1,250

பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி இல 33 - 40. வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

- 2019/12/31ல் இருந்தவாறு சந்திரன் வணிகத்தின் கணக்குகளில் இருந்து பிரித்தெடுத்த சில மீதிகள் வருமாறு

விபரம்	வரவு ரூபா	செலவு ரூபா
கொள்வனவு	450,000	
விற்பனை		590,000
கட்டிடம் (கிரயம்)	300,000	
உபகரணம் (கிரயம்)	50,000	
2019/01/01ல் கட்டிட பெ.தே.ஏற்பாடு		30,000
2019/01/01 இருப்பு	12,000	
கொடுத்தகழிவு	1,000	
பெற்றகழிவு		5,500
காப்புறுதி	5,500	
விளம்பரம்	25,000	
15% வங்கிக்கடன்		50,000
வங்கிக்கடன் வட்டி	7,500	
கடன்பட்டோர்	18,000	
கடன்கொடுத்தோர்		23,000
காசு	29,500	
2019/01/01ல் மூலதனம்		200,000
	898,500	898,500

<u>மேலதிக தகவல்கள்</u>

(i) 2019/12/31ல் இருப்பு ரூபா 12,000

(ii) கடன்பட்டோரில் ரூபா 2,000 த்தை அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிக்குக.

(iii) கட்டிடம் மற்றும் உபகரணங்களுக்கு வருடாந்தம் 10% நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்

(33) 2019/12/31ல் முடிவடைந்த வருடத்திற்கான விற்பனைக் கிரயம்

(1) ரூபா 450,000 (2) ரூபா 462,000

(3) ரூபா 140,000 (4) ரூபா 474,000

(34) 2019/12/31ல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்த இலாபம்

(1) ரூபா. 590,000 (2) ரூபா. 140,000

(3) ரூபா. 450,000 (4) ரூபா. 462,000

(35) 2019/12/31ல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக் கூற்றில் வினியோகச்செலவின் பெறுமதி

(1) ரூபா. 55,000 (2) ரூபா. 30,000
(3) ரூபா. 28,000 (4) ரூபா. 76,000

(36) இவ்வணிகத்தின் நடைமுறைச் சொத்தினைக் காட்டும் சரியான விடை,
(1) கடன்கொடுத்தோன், காசுமீதி, கட்டிடம்
(2) கடன்பட்டோன், வங்கிமேலதிகப் பற்று, காசுமீதி
(3) இறுதியிருப்பு, வினியோகவான், காசுமீதி
(4) கடன்பட்டோர், காசுமீதி, இறுதியிருப்பு

(37) இவ் வணிகத்தின் 2019/12/31ல் முடிவடைந்த வருடத்திற்கான தேறிய இலாபம்

(1) ரூபா. 69,500 (2) ரூபா. 76,000
(3) ரூபா. 78,000 (4) ரூபா. 72,500

(38) 2019/12/31ல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செலவின் கீழ் அடங்கும் வங்கிக்கடன் வட்டி

(1) ரூபா 7,000 (2) ரூபா. 7,500
(3) ரூபா. 5,000 (4) ரூபா. 5,500

(39) 2019/12/31ல் நடைமுறையல்லாச் சொத்துக்களின் தேறிய பெறுமதி யாது?

(1) ரூபா. 290,000 (2) ரூபா. 240,000
(3) ரூபா. 285,000 (4) ரூபா. 250,000

(40) 2019/12/31ல் இவ்வணிகத்தின் உரிமை யாது?

(1) ரூபா. 269,500 (2) ரூபா. 200,000
(3) ரூபா. 254,500 (4) ரூபா. 224,500

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதி மதிப்பீடு - 2020
Year End Evaluation

ශ්‍රේණිය / தரம் / Grade 11	විෂයය / பாடம் / Subject: வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும்	පත්‍රය / வினாத்தாள் / Paper II	කාලය / காலம் / Time 02 மணி

முக்கியம்:- அறிவுறுத்தல்களுக்கமைய ஐந்துவினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

- முதலாம் வினா உட்பட பகுதி 1 லிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி 11 இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

❖ பின்வரும் சம்பவத்தைப் பயன்படுத்தி (i) - (x) வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

(01) க.பொ.த (உயர்தரம்) விஞ்ஞானப்பிரிவில் கல்விகற்ற அசித்த உயர்தரப் பரீட்சையின் பின் உள்ளூர் உணவுப்பொருள் தயாரிப்புத் தொடர்பான 6 மாதகாலப் பாடநெறியைப் பின்பற்றினார். தொற்றுநோய்ப் பரவலின் காரணமாக உள்நாட்டு உற்பத்தி தொடர்பாக மக்களின் ஆர்வம் அதிகரித்துச்சென்றகாரணத்தினால். உள்ளூரில் காணப்படும் இளநீரை ரின்களில் அடைத்து "கொக்கோ ரின்ங்ஸ்" (coco drinks) எனும் பெயரில் வணிகமொன்றை ஆரம்பித்தார்.

ஆரோக்கியத்திற்கு உகந்த குடிபானமாக இவ்விளநீர் குடிபானம் காணப்பட்டதால் உள்நாட்டுச் சந்தையில் அதிக கேள்வி காணப்பட்டது.

இவ்வணிகத்தில் 2019 ஜனவரி 01ல் கீழ்வரும் மீதிகள் காணப்பட்டது.

	ரூபா
காசுமீதி	1,200,000
உபகரணம்	300,000
காணி கட்டிடம்	500,000
கடன்பட்டோன்	50,000
கடன்கொடுத்தோன்	30,000

2019 ஜனவரி 31 க்குள் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு.

	ரூபா.
⋆ இளநீர் வாங்கியது	100,000
⋆ ஊழியர் சம்பளம்	20,000
⋆ போக்குவரத்துச் செலவு	7,000
⋆ இளநீர்குடிபான விற்பனை	200,000
⋆ செலுத்தவேண்டிய மின்கட்டணம்	3,000

அசித்தவுடையை இளநீர் உற்பதிக்கு உள்நாட்டில் நல்ல கேள்வி காணப்பட்டதால் வெளிநாட்டு சந்தையில் பிரவேசிப்பதற்கான எதிர்பார்ப்பும் அவரிடம் காணப்பட்டது. மேலும் இவ் வணிகத்தை பங்குடைமை ஆக்குவதற்கான தேவை காணப்பட்டதால் 2019/02/01ல் அவரது நண்பனான பரதன் என்பவரை இவ்வணிகத்தில் இணைத்துக் கொண்டார். பரதன் இவ்வணிகம் தொடர்பான அறிவுள்ளவராவார். பரதனுடைய தென்னைமரங்கள் பயிரிடப்பட்ட 3 ஏக்கர் காணியும் இவ்வணிகத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வணிகத்தின் காணிகட்டிடம் மற்றும் உபகரணங்களுக்கும் பெறுமானத்தேய்வு இடப்பட வேண்டும். அத்துடன் மாத முடிவில் எவ்வகையான இருப்புக்களும் காணப்படவில்லை.

(i) (அ) 01/01/2019 திகதியில் “coco drinks” வணிகமானது உரிமை அடிப்படையில் எவ்வகையைச் சார்ந்தது?

(ஆ) இவ்வணிகத்தின் உற்பத்திக்கான இளநீர் எவ்வகை உற்பத்திக் காரணியாகும்?

(ii) மேற்படி சம்பவத்தின்படி ' Coco Drinks"வணிகத்தின் பலங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(iii) (அ) "Coco Drink" வணிகத்தினைப் பதிவுசெய்வது தொடர்பாக உமது கருத்தினைக் குறிப்பிடுக?

(ஆ)இவ்வணிகத்தின் பெயரைப் பதிவு செய்வதற்கான பொருத்தமான சட்டம் எது?

(iv) (அ)இவ்வணிகத்தில் நண்பன் பரதன் இணைக்கப்பட்ட பின் இவ்வணிகத்தில் காணப்படும் அனுகூலங்கள் இரண்டு தருக.

(ஆ) இவ்வணிகத்தின் கொடுக்கல் வாங்கல்களை காசோலை மூலம் மேற்கொள்வதற்கு ஆரம்பிக்க வேண்டிய வங்கிக் கணக்கு யாது?

(v) "Coco Drinks" வணிகத்தன் 01/01/2019ல் உரிமையாண்னம எவ்வளவு?

(vi) இவ்வணிகத்தின் 31.01.2019ல் நடைமுறைப் பொறுப்பின் பெறுமதி யாது?

(vii) 01/01/2019ல் இவ்வணிகத்தின் கணக்கியல் சமன்பாட்டினை பெறுமதிகளுடன் எழுதுக.

(viii) (அ) "Coco Drinks" வணிகத்தின் 31/01/2019 காசு மீதியைக் கணிப்பிடுக.

(ஆ)இவ்வணிகத்தின் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கு 12% பெறுமானத்தேய்விடப்பட்டால் அவ் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வைக் கணிப்பிடுக

(ix) மேற்குறிப்பிட்ட பெறுமானத்தேய்விடப்பட்ட நடை முறையல்லாச் சொத்துக்களுக்கான பதிவினை பொதுநாட் குறிப்பில் பதிந்து காட்டுக

(x) "Coco Drinks" வணிகத்தின் 31.01.2019ல் தேறிய இலாபத்தைக் கணிப்பிடுக.

(2 × 10 = 20 புள்ளிகள்)

பகுதி I

வணிகக்கல்வி

(இருவினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக)

(02) (i) (அ) உற்பத்திக்காரணிகள் என்பதனை வரையறை செய்க

(ஆ) முயற்சியாளரின் கருமங்கள் இரண்டு தருக.

(ii) கீழே தரப்பட்ட கூற்றுக்கள் சரியா, பிழையா எனக்குறிப்பிடுக.

(ஆ) வணிகமானது நுகர்வோரது வருமானமட்டம், சமூகநிலை என்ப வற்றைக் கருத்தில் கொள்ளவேண்டும் (...........)

(ஆ) உற்பத்தியின் போது மனிதனால் உருவாக்கப்பட்டவைகளும் உற்பத்தியின் போது துணையாகக் கொள்ளப்படுபவையும் முயற்சி எனப்படும் (...........)

(இ) தரமான மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்வது வழங்குனரின் நோக்கமாகும் (............)

(ஈ) ஒரு நாட்டின் அரசினால் பின்பற்றப்படும் வேறுபட்ட கொள்கைகள் அரசியல் சூழலில் அடங்கும் (............)

(iii) சத்துரிகா பாடசாலை ஒன்றிற்கருகில் பாடசாலை உபகரணங்களை விற்பனை செய்யும் வணிகம் ஒன்றை ஆரம்பித்தார். அவ்வணிகத்திற்கான பாடசாலை

உபகரணங்கள் ஜனக என்பவரால் வழங்கப்பட்டது. இவ்வணிகத்தை பங்குடைமை ஆக்குவதற்கு பண்டார என்பவரைச் சேர்த்து அவரை அதில் முகாமையாளராக்குன்றார். அத்துடன் தினமும் அதிக எண்ணிக்கையான மாணவர்களால் அவ்வணிகத்திலிருந்து பாடசாலை உபகரணங்கள் வாங்கப்பட்டது.

(அ) மேற்கூறப்பட்ட சம்பவத்தின்படி வணிகச் சூழலை வகைப்படுத்துக.

(ஆ) மேலே நீர் (அ) குறிப்பிட்ட வணிகச்சூழலுக்குப் பொருத்தமான உதாரணம் தருக.

(iv) நீண்டகாலமாக இலங்கையில் பொருட்கள் சேவைகளின் விலையானது அகிகரிததுச்செல்லும் போக்கே காணப்படுகிறது.

(அ) பொதுவிலைமட்டம் அதிகரிப்பதற்கான பொருளாதாரச் சூழல் காரணி எது?

(ஆ) பொருளாதாரச் சூழல் காரணியில் அடங்குடம் அன்னியச் செலாவணி மாறுவீதம் என்பதனை வரையறைசெய்க.

(2 × 4 = 8 புள்ளிகள்)

(03) (i) (அ) "வணிக அமைப்புக்கள்" என்பதனை வரையறைசெய்க.

(ஆ) நோக்க அடிப்படையில் வணிக அமைப்புக்களின் இரு வகைகளையும் குறிப்பிடுக

(ii) கீழே தரப்பட்ட கூற்றுக்கள் சரியா, பிழையா எனக்குறிப்பிடுக.

(அ) வணிக அமைப்புக்களின் பருமனானது வணிகத்தின் மூலதனத்தினளவு, ஊழியர்களின் எண்ணிக்கை. பயன்படுத்தப்படும் வலுவின் அளவு எனும் நியதிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. (............)

(ஆ) பாரிய வணிகமொன்றை நடாத்திச் செல்வதற்டு பங்குடைமையை விட தனியுடைமை வணிகம் பொருத்தமானது. (............)

(இ) கூட்டுறவு சங்கமானது ஒரு பொதுத் துறை வணிகமாகும். (............)

(ஈ) கூட்டுத்தாபனம் தாபிக்கப்படுவது பொது அல்லது விசேட சட்டத்தின் மூலமாகும். (............)

(iii) ஒருவணிகமானது மொத்த வியாபாரமா அல்லது சில்லறை வியாபாரமா எனத்தீர்மானிக்கப்படுவது கொள்வனவாளரின் நோக்கத்தின் அடிப்படையிலாகும்.

(அ) சில்லறை வியாபாரம் என்றால் என்ன?

(ஆ) மொத்த வியாபாரத்தின் பண்புகள் இரண்டு தருக.

(iv) ராஜா என்பவர் ஓர் வணிகத்தை நடாத்திச் செல்லும் முயற்சியாளராவார். இவர் வணிக வங்கியொன்றில் நடைமுறைக் கணக்கு ஒன்றை ஆரம்பித்து காசோலை ஊடாகக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்றார்.

(அ) காசோலையில் குறுக்குக்கோடிடுதல் என்றால் என்ன?

(ஆ) காசோலையில் குறுக்குக்கோடிடுதன் இருவகையாவன? (2 × 4 = 8புள்ளிகள்)

(04) (i) (அ) சந்தைப்படுத்தல் கலவையை விபரிக்குக

(ஆ) இலக்கு சந்தை என்றால் என்ன?

(ii) கீழே தரப்பட்ட கூற்றுக்கள் சரியா, பிழையா எனக் குறிப்பிடுக.

(அ) போக்குவரத்தின் அடிப்படை மூலகங்களில் தரிப்பிடமும் ஒன்றாரும் (............)

(ஆ) கட்டிடம், இயந்தர உபரணங்கள் மோட்டார்வாகனங்கள் சரக்கிருப்பு போன்றவற்றிற்கு சேதம் ஏற்படாதுவிடினும் இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம் .(............)

(இ) “CEY NET“ தன்னியக்க அட்டையானது (ATM) சம்பத் வங்கியினால் வழங்கப்படும். (............)

(ஈ) நிலையான வைப்பிற்கான வட்டியை மாதாந்தம் அல்லது முதிர்வின் போது பெற்றுக்கொள்ளலாம். (............)

(iii) லலனி பிரபல்யமான வணிகமொன்றை நடாத்திச்செல்லும் பெண்மணியாவார். இவர் 2018.01.01ல் “லலனி பியூட்டி சலூன்” (Lalani Beauty Saloon) எனும் பெயரில் வணிகமொன்றை ஆரம்பித்தார். இவ்வணிகத்தின் இலக்குகளை அடைவதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கை தொடர்பான தீர்மானத்தை எடுக்க உறுதியாக இருத்தாள் இதற்காக ஊழியர்களுக்கும் சரியான ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

(அ) மேற்படி சம்பவத்தில் “லலனி பியூட்டி சலூன்” வணிகத்தின் இரு முகாமைத்துவக் கருமங்களளக் குறுப்பிடுக

(ஆ) மேலே (அ) வில் குறிப்பிட்ட முகாமைத்துவ கருமங்களுக்கு இரண்டு உதாரணங்கள தருக.

(iv) நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முதலீடானது பெரும்பங்காற்றுகின்றது

(அ) கம்பனியொன்றினால் வழங்கப்படும் “பங்கு” என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது.

(ஆ) திறைசேரி உண்டியலை கொள்வனவு செய்வதனால் கிடைக்கும் அனுகூலங்கள் இரண்டு தருக. (2 × 4 = 8 புள்ளிகள்)

பகுதி II - கணக்கீடு

❖ இரு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக

(05) (i) (அ) கணக்கியலின் நோக்கம் யாது? (2 புள்ளிகள்)

(ஆ) பொறுப்பில் காணப்படும் இரண்டு பண்புகளைக் குறிப்பிடுக (2 புள்ளிகள்)

(ii) தனுஷ் வணிகத்தின் 2020 ஜனவரி மாதத்துள் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

1) ரூபா 50,000 வங்கிக்கடன் பெறப்பட்டது.
2) உரிமையாளர் தனது சொந்த தேவைக்காக எடுத்த காசு ரூபா 8,000
3) வணிகப்பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் ரூபா 30,000
4) பண்டக் கொள்வனவு ரூபா 15,000
5) ரூபா. 4,000 பெறுமதியான பண்டங்கள் ரூபா 1,000 இலாபத்துடன் காசுக்கு விற்கப்பட்டது

வேண்டப்படுவது,

(a) மேலே தரப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல்களும் கணக்கீட்டுச் சமன்பாட்டின் மீது எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பதனைக் குறிப்பிடுக.

(விடையளிப்பதற்கு பின்வருவது போன்ற மாதிரியைப் பயன்படுத்துக)

	சொத்துக்கள்			உரிமை	பொறுப்புக்கள்	
கொடுக்கல் வாங்கல்கள்	தளபாடம்	இருப்பு	காசு		வங்கிக்கடன்	கடன்கொடுத்தோர்
1/1 மீதி	60,000	12000	200000	262000		10000
1			+50000		+50,000	
2						
3						
4						
5						

(3 புள்ளிகள்)

(ஆ) தனுஷ் வணிகத்தின் முதல்வார இறுதியில் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி எவ்வளவு? (1 புள்ளி)

(iii) விநோதன் வணிகத்தின் 2020 மார்ச மாதத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு.

திகதி	பட்டியல் இல	வழங்குனர்	பெறுமதி ரூபா
3/5	130	கயான்	11,000
3/12	215	அசங்க	8,750
3/20	300	ரூபன்	3,250

வேண்டப்படுவது,

(அ) மார்ச் மாதத்திற்கான கொள்வனவு நாளேட்டைத் தயாரிக்குக.

(ஆ) உரிய பேரேட்டுக் கணக்குகளைத் தயாரிக்குக. (4 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

(06) (i) (அ) வணிகமொன்றில் பயன்படுத்தப்படும் முதன்மை ஏடுகள் இரண்டைக் குறிப்பிடுக

(ஆ) காசுக் கணக்கின் இரட்டைத் தொழிற்பாட்டைத் தருக (2 புள்ளிகள்)

(ii) சதீஸ் வணிகத்தின் 2020 ஜனவரி மாதத்திற்கான சில்லறைக் காசு கொடுப்பனவுகள் கீழே தரப்பட்டுள்ளது. இவ்வணிகத்தின் சில்லறைக்காசுக்கட்டுநிதி ரூபா 2000 2019/12/31ல் மீதி ரூபா 150.

அம்மாதத்திற்குள் இடம்பெற்ற சில்லறைச் செலவுகளின் விபரம் வருமாறு.

1/5	தபாற்செலவு	ரூபா. 80
1/12	உட்சுமைக்கூலி	ரூபா.400
1/16	பதிவுத்தபால் செலவு	ரூபா.120
1/20	காரியாலய தளபாடம் வாங்கியது	ரூபா.900
1/25	உபசரணைச் செலவு	ரூபா.200
1/30	நானாவித செலவு	ரூபா.200

வேண்டப்படுவது

1. 01/01/2020 ம் திகதியில் பிரதம காசாளரிடமிருந்து மீளநிரப்பப்பட்ட தொகை எவ்வளவு? .
2. 31.01.2020 ல் பேரேட்டுக் கணக்கில் அடங்கியுள்ள செலவுகளின் பெறுமதி எவ்வளவு? (2 புள்ளிகள்)

(iii) மதுஷி வணிகத்தின் 01.06.2020ம் திகதியில் வங்கிக் கணக்கு மீதி ரூபா.60,000 ஆகும். யூன்மாதத்தில் வணிகத்தின் நடைமுறைக் கணக்கினூடாக மேற்கொள்ளப்பட் கொடுக்கல் வாங்கல்கள் கீழேதரப்பட்டுள்ளன.

வைப்புக்கள்

6/2	காசு	ரூபா. 18,000
6/12	காசோலை வைப்பு	ரூபா. 20,000
6/25	காசோலை வைப்பு	ரூபா.16,000

வழங்கப்பட்ட காசோலை

6/4	கடன்கொடுத்தோனான தீபிக்குக் கொடுத்து	ரூபா. 8,000
6/12	சம்பளம் கொடுத்தது	ரூபா.12,000
6/18	மின்கட்டணம் செலுத்தியது	ரூபா. 6,000
6/27	கொள்வனவுக்காக செலுத்தியது	ரூபா. 26,000

மேற்காட்டிய கொடுக்கல் வாங்கல்களை வங்கிக் கணக்கில் பதிந்து சம்பப்படுத்திக்காட்டுக (4 புள்ளிகள்)

(iv) அருஷன் வணிகத்தின் 2020 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கணக்கும் வங்கிக்கூற்றும் கீழேதரப்பட்டுள்ளது

அருஷன் வணிகத்தின்
2020 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கணக்கு

திகதி	விபரம்	பே.ப.	தொகை	திகதி	விபரம்	பே.ப.	தொகை
1/1	மீ/கீ/கொ/வ		15000	1/2	கிஷானி(கா.இல30)		5000
1/5	காசு (கா.இல 40)		4000	1/4	மதுரா (கா.இல31)		2000
1/15	காசு (கா.இல 75)		2500	1/6	ஜெனி (கா.இல32)		3000
1/20	காசு (கா.இல 45)		3200	1/10	அக்ஷா(கா.இல33)		8000
1/29	காசு (கா.இல 48)		1300	1/25	றொபின்(கா.இல34)		4000
1/30	காசு (கா.இல 34)		4800	1/31	மீ/கீ/கொ/செ		8800
			30800				30800

வங்கிக்கூற்று

திகதி	விபரம்	வரவு	செலவு	மீதி
1/1	மீதி			15000
1/4	கா.இல 30(கிஷானி)	5000		10000
1/7	காசோலை இல 40		4000	14000
1/17	கா.சோலை இல 75		2500	16500
1/18	காசோலை இல 31 (மதுரா)	2000		14500
1/20	காசோலை இல 32 (ஜெனி)	3000		11500
1/22	காசோலை இல 45		3200	14700
1/23	வங்கிக்கட்டணம்	700		14000
1/24	வாடகை	4000		10000
1/26	ஜனகன்		10000	20000

வேண்டப்படுவது

1. 2020/01/31ம் திகதியில் சீராக்கிய வங்கிக் கணக்கைத் தயாரிக்குக.
2. 2020/01/31ல் வங்கி இணக்கக் கூற்றினைத் தயாரிக்குக (4 புள்ளிகள்))

(மொத்தம் 12 புள்ளிகள்)

(07) (i) (அ) வணிகத்தினால் உழைக்கப்பட்ட செயற்பாட்டு பெறுபேற்றினைக் கணிப்பீடு செய்வதற்கான பணிகள் இரண்டினைப் பெயரிடுக.

(ஆ) அறவிடமுடியாக் கடனுக்கான இரட்டைப் பதிவினை எழுதுக. (2 புள்ளிகள்)

(ii) குழந்தைகளுக்கான தளபாடங்களை உற்பத்தி செய்யும் வணிகமொன்றின் 2019 ஜனவரி மாதத்திற்கான தகவல்கள் கீழேதரப்பட்டுள்ளது

- ⋆ உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் 100
- ⋆ முதற்கிரயம் ரூபா 40000
- ⋆ போக்குவரத்துச் செலவுகள் ரூபா. 5000
- ⋆ ஒரு அலகுக்கான உற்பத்திக்கிரயம் ரூபா. 500
- ⋆ இலாப எல்லை மொத்த உற்பத்தி கிரயத்தில் 25% ஆகும்.

வேண்டப்படுவது,

(அ)2019 ஜனவரி மாதத்தின் உற்பத்தி மேந்தலைக் கிரயம் எவ்வளவு?

(ஆ)அலகுக்கான விற்பனை விலை யாது? (2 புள்ளிகள)

(iii) சாந்தனியினுடைய வணிகத்தின் 2019/12/31ம் திகதியில் எடுக்கப்பட்ட மீதிகள் வருமாறு.

விபரம்	வரவு (ரூபா)	செலவு(ரூபா).
காணிகட்டிடம்	500,000	
இயந்திரம் (கிரயம்)	300,000	
2019/01/01ல் இயந்திரத்திற்கான பெறுமானத் தேய்வு எற்பாடு		30,000
2019/01/01ல் இருப்பு	50,000	
விற்பனைகள்		400,000
கொள்வனவுகள்	120,000	
பெற்றகழிவு		3,000
கொடுத்தகழிவு	2,000	
உட்சுமைக்கூலி	6,000	
10% வங்கிக்கடன்		120,000
சம்பளங்கள்	8,000	
கடன்பட்டோர்	15,000	
கடன்கொடுத்தோர்		12,000
விளம்பரம்	4,000	
ஏற்றல்கூலி	2,000	
வங்கிக்கடன்வட்டி	6,000	
மின்சாரக்கட்டணம்	5,000	
வரிக்கட்டணம்	3,000	
மூலதனம்		465,000
காசுமீதி	9,000	

- மேலதிக தகவல்கள்
  - ★ 2019/12/31ல் இருப்பு ரூபா.35000.
  - ★ இயந்திரங்களுக்கு நேர்கோட்டுமுறையில் 10% பெறுமானத்தேய்வு இடப்படல் வேண்டும்.
  - ★ கடன்பட்டோரில் ரூபா 1,500 அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிக்குக.

தயாரிக்க வேண்டியவை

(அ) 2019/12/31ல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபநட்டக்கூற்று. (4 புள்ளிகள்)

(ஆ) 2019/12/31ல் உள்ளடியான நிதிநிலைமைக்கூற்று. (4 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)